எண் 124.

திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள்.

சம்பந்தர் அப்பர் சுந்தரர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
௨௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 124.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள்.

இது
திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம்
உரு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1946.

பிரதிகள் 500.

திருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

ഉ

குருபாதம்

முன்னுரை

திருப்புன்கூர் என்னும் இத்தலம் வைத்தீஸ்வரன்கோயில் என்னும் தலத்தின் மேற்கே சுமார் ஒன்றரைகல் தொலைவில் விளங்குகிறது. தலவிருக்ஷம் புன்கு ஆதலால் புன்கூர் எனப் பெயர்பெற்றது. திருநாளைப்போவார்நாயனுர் இத்தலத்துக்குவந்து வெளிநின்று சுவாமிதரிசனம் செய்யுங்கால் இறைவன் திருநந்திதேவரைச் சற்று விலகச்செய்து காட்சி தந்தருளிய சிறப்பினை உடையது. ஆலயத்தின் மேல்பால் விளங்கும் திருக்குளம் வெட்டித் திருப்பணி புரிந்ததும் இந்நாயனுரேயாவர். இத்தலத்தின்வடபாலுள்ள திருப்பெருமங்கலத்தில் திருவவதாரஞ்செய்த ஏயர்கோன் கலிக்காம நாயனுரும் இத்தலத்தில் அதிகமான திருப்பணிசெய்து வழிபட்டுள்ளார். இறைவன் திருநாமம் சிவலோக

நாதர். இறைவி சொக்கநாயகி. திருஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் களும் பாடிய பதிகங்கள் மூன்று உள்ளன. அம்மூன்றும் அடங்கிய இந்நூல் ஆதீன வெளியீடாக அச்சிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் ஜன்ம நக்ஷத்திரத் திருநாளில் மாதந்தோறும் செய் து வரும் முறைப்படி இம்மாதத்திலும் (விய ஆண்டு மார்கழித்திங்கள் 2.ம்நாள் இத்தலப் பெருமானுக்கு ஆதீனச்சார்பில் அபிஷேக ஆரா தனை செய்வித்து, பதிகங்களை ஓதுவித்து, ஆங்கு இந்நூலும் வழங்கப்பெற்றது. அன் பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து சிவலோகநாதப் பெருமான் திருவருளால் எல்லா நலனும் பெற்று உய்வார்களாக.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகப் பொருள் விளக்கம்

திருஞானசம்பந்தர் திருப்பதிகம்:

1. பொன்னிறத்த கொன்றையும் தும்பையும் மணம் வீசுகின்ற மென்மையாகிய நீண்ட சடாபாரத்தையுடைய முடிவில்லாத திருப்புன்கூர் அடிகளைச் சிந்தைசெய்வாயாக; நெஞ்சமே! அநாதியே நம்மை விடாது பற்றி நிற்கின்ற வலிய வினைகள் நீங்குமாறு. வல்வினைகள் நீங்குவதற்கு உபாயம் இறைவனை இடைவிடாது சிந்தித்தலேயாகும். அடிகள் என்பது ஆண்டானை அடிமை முன்னிலைப் படுத்திக் கூறுஞ்சொல்,

2. அயன் அரி அரன் என்னும் மூவரும் தானேயாய் நின்ற பெரியோர்; ஏனைய எத்தேவர்கட்கும் அழிக்கலாகாத பொன் வெள்ளி இரும்பு என்னும் மூன்று மதில்களையும் சிற்றுயிர்க்கிரங்கி எரித்தழித்த

அம்மையும் உடையார். ஆதலால் எல்லாத் தேவரும்வந்து முறைப்படி வணங்குகின்ற திருப்புன்கூர் இறைவர். ஒடுக்கத்தில் மூவரும் ஒருவராயும் தோற்றத்தில் ஒருவரே மூவராயும் நிற்பர் என்பதும், திரிபுரம் எரித்த பேராற்றலுங் கூறப்படுகிறது.

3. செந்தாமரை மலர்கள் அலர்கின்ற செஞ்சாலிவயலில் செங்கயல் மீன்களும் துளைந்து விளையாடும் வளப்பமிக்க திருப்புன்கூரின்கண் எழுந்தருளியிருப்பவர்-கங்கா நதியும் தாங்கிய சடாமுடியையும் உடையார் அவ்விறைவரே. எங்கட்குத் தலையால் வணங்கத்தக்க தலைவராம். எம்மையென்ற உளப்பாட்டுத்தன்மைப்பன்மையால் என்றும் மீளா அடிமையே வேண்டிநிற்கும் எம் போன்ற அடியார்கட்கு எனக் கூறுவாராயின் தம்மை யுணர்ந்தவற்கன்றி தம்மை யுடையானாகிய தலைவனுக்கு ஆட்படுதல் அரிதாம் என்பது குறிப்பு.

4. கரையில் உதிர்ந்த முத்துக்களை அலைகள் அலைக்கின்ற வளவயல் சூழ்ந்த திருப்புன்கூரின்கண் உள்ளவன். உரைப்பார் உரைக்குத்தக்க பொருள்சேர்ந்த புகழுடைய நலமிக்க பெரியோன். அன்றியும் நன்மலர் போலும் நறுமணமிக்க சேவடிகளையும் உடையான். ஆளவல்லது திருவடிகளே என்பதையும் குறிப்பிக்கப்பெற்றது.

5. செவ்விய பவளம்போலும் திருமேனியையுடைய அழகராம் அடிகள் புகழத்தக்க திரண்டு நீண்ட சடையுடைப் பெரியோன் திருப்புன்கூர் இறைவர் என்பதாம்.

6. கண்டு மகிழும்படி செங்கழுநீர் முகைகளும் நிமிர்ந்து தொங்குகிற செந்நெற் கதிர்களும் சேர்ந்து அழகு செய்யும் வயல் சூழ்ந்த திருப்புன்கூரின்கண் இளம்பிறையோடும் விரிந்து விளங்கும் சடையோடும் அமர்ந்திருந்து அருளுகின்றார் என்பதாம்.

7. மண்ணுலகத்தவரும் விண்ணுலகத் தவரும் தொழுதேத்தும்படிக்குத் தேரணி விழா நிகழும் திருப்புன்கூரில் அமர்ந்து அருள்செய்யும் அடிகளே கொடியமதிலாகிய திரிபுரங்கள் மூன்றையும் எரித்தவல்லாளன் என்பதாம். திரிபுரத்தை அழித்த விறல் தோன்ற ஈரிடத்தும் பேசுவாராயினர். அரிய செயல்களை வற்புறுத்திப்பலவிடத்துங் கூறுவது மரபு இலக்கண வழுவின்மை அறிக.

8. மலைபோலும் வலிதாய் அழிக்கலாகாத மும்மதில்களையும் மலையை வில்லாகக் கொண்டே அழித்தோன். அன்றியும் வலிய இராவணனை அவனெடுத்த மலைக்கீழ்வைத்து அம் மலையைக் கொண்டே அஞ்சஅடர்த்து மகிழ்ந்தோன் திருப்புன்கூர் அமர்ந்தருளும் இறைவன் என்பதாம்.

9. அற்புதக் கூத்துகந்தோன் அன்றியும் பாடலோடு ஆடலும்வல்லோன் தேடற்குரிய அயனுமாலும் தேடுமாறு திருப்புன்

கூரின்கண் எழுந்தருளியிருக்கும் சிவலோக நாதன் தானே இரங்கி அருள்புரிந்தாலன்றி போதமுனைப்பால் தேடக்கிடைக்காதவன். ஆதலால் அவன் அருளையே நோக்கி நிற்க என்பது குறிப்பு.

. *10.* பிறர் குற்றங் கூறுவதில் தெளிவுடையாராய் அரையினிடத்து ஆடையுமின்றி கைக்கவளமாய் உணவு கொண்டு திரியும் பிராந்தராகிய அமணர்களது பொய்யுரைகேளாதீர்; திருப்புன்கூர் மேவியிருக்கும் காபாலியாகிய சிவபெருமானது திருவேடங் கண்டு தொழுவீர்களாக என்பதாம். பிராந்தர்-மயக்கமான விபரீத உணர்வுடையோர். கபாலி-கரத்தில் தலையோட்டை ஏந்தியிருப்பவர். பொய்யுரையாவது வினையே பயன்தரும் இதற்கோர் தலைவன் வேண்டா மென்னும் புரையுரை.

11. மாளிகைகளும், மதில்களும் சூழ்ந் தோங்கி அழகு செய்யும் சீகாழி வேந்தன்,

சீலத்தோடு செல்வமுமுடையோர்கள் வாழ்கின்ற திருப்புன்கூர் மேவிய இறைவனை மெய்ப்பொருள் ஆய்ந்து பாடுவதிலே வல்லவனை திருஞானசம்பந்தன் பாடிய இப்பாடல்கள் பத்தையும் பாடியும் ஆனந்த மிகுதியால் ஆடியும் பணிந்தும் உய்வீர்களாக என முன்னிலைப் பன்மை எவல் வினைமுற்றில் வைத்துக் கூறுவாராயின் யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்னும் அன்பின் மிகுதியால்.

திருநாவுக்கரசர் திருப்பதிகம்:

1. பிறப்பின்றி திருமேனி கொண்ட பெம்மான், தனைவந்து பணிந்து போற்றாதாரைத்தானுங் கருதாதவன், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியே நின்ற தூய இலங்கொளியான், மேலாய நெறியாளர்க்கும் நெறிகாட்டி நின்ற இறைவன், எண் திசைகளும் தானேயாய் நின்றும் வணங்க எளிதாய்த் திருப்புன்கூரின்கண் அமர்ந்தருளும்

சிவலோகநாதனை, பேரொளிப்பிழம்பாய் நீடுரென்னும் தலத்தும் மேவியிருப்பவனை நீதியுடையனாய் எண்ணி என்னை யான் சிந்தை செய்யாதிருந்தவண்ணம் எனத் தன் குறை நேர்வாராயினர்.

2. எல்லாப் பொருள்களும் தோன்றுவதற்கு முன்னும் எல்லாப்பொருள்களும் தோன்றி ஒடுங்கிய பின்னுமாய் இருப்பவன், தன்னையே நினைந்து பித்தேறினாரிடத்துத் தானும் பித்தனாய் இருப்பவன், முற்றுணர்வுடையாரிடத்து தான் அவர்என பிரிப்பின்றி வேறறநிற்பவன், இருவினைகளும் தானேயாயும் நிற்பவன், இருபெருந்தேவர் தேட விண்ணோங்கு தீப்பிழம்பாய் நின்றவன், அவனே திருப்புன்கூரின்கண் அமர்ந்தருளும் சிவலோகநாதன், நீடூரிலும் மேவியிருப்போன், அவனை என்னை நான் நினையாமல் இருந்தவாறு.

3. இங்குளன் அங்கிலன் என்பதன்றி எங்குமாய் நிறைந்து நின்றவனை, இன்பத்தின்

நன்னெறியால் தன்னை நினையாதவர்க்கு இன்பஞ் செய்யாதவனை, வந்தடைந்தார்க் கருள்பவனை, தன்னை வந்து வணங்காதார்க்கு வேறெவ்வகையானும் அருள்செய்யாதவனை, செல்வதற்கரிதாகிய சிவநெறிக்கே ஆன்மாக் களைச் செலுத்துகின்றவனை, திருப்புன்கூரின் கண் அமர்ந்திருக்கும் சிவலோகநாதனை, விளைவுமிக்க வயல்சூழ்ந்த நீடூரிடத்தும் மேவி இருப்பவனை, என்னே நான இதுகாறும் நினையாமல் இருந்தவாறு.

4. பற்பல கோலங்களோடுங் கூடிய திருவுருவங்களெல்லாம் தானேயாய் நின்று பணிபவர்க்கு அவ்வவ்விடத்து உறுதுணையாய் நிற்கின்றவனை, மேருவென்னும மலையை வில்லாகக்கொண்டு திரிபுரங்களை எரிசெய்தவனை. திருப்புன்கூரின்கண் எழுந்தருளி இருக்கும் சிவலோகநாதனை, மாடமாளிகை நிறைந்திருக்கும் நீடூரின்கண்ணும் மேவி இருப்பவனை, என்னே யான் நினையா திருந்தவாறு.

5. ஒரு பொருளையும் சுட்டி யறியாத வனாயிருந்தும் எல்லாப்பொருளையும் அறிய வல்லவனை, தான் ஒன்றையும் நுணுகி ஆராயாதவனாய் எல்லாப் பொருளினும் நுண்மையானவனை, தான் ஒருபொருளையும் ஆக்காது எல்லாப் பொருளும் காரியப் படுவதற்கு நிமித்தகாரணமாய் நிற்கின்ற வனை, மிக்க மெய்யன்பினால் தன்னைச் சார்ந் தாரையன்றி, தானே ஒருவரையும் சாராத வனை, யாதொரு திகைப்புமின்றித் தெள்ளிய கடல் நஞ்சை யுண்டவனை, திருப்புன்கூரின் கண் அமர்ந்திருக்கும் சிவலோகநாதனை. அழகுமிக்க நீடூரிலும் மேவியிருக்கின்றவனை, என்னே நான் நினையாமலிருந்தவாறு.

6. யாரும் அணியாத அரவையே ஆபரணங்களாய் அணிந்து கொண்டவனை, வஞ்சகர்பூசுதற்கு அஞ்சுகின்றதிருநீற்றையே தான் சாந்தமாகப் பூசுகின்றவனை, புலால் மணங்கமழும் பிரமகபாலத்தில் ஐயமேற் றுண்பவனை, எவர்க்கும் அறிய ஒண்ணாத

பரமோத்துமனை, ஒளிவிடும் திருமேனி செவ்வியபவளமலைபோன்றவனை, திருப்புன்கூரின்கண் எழுந்தருளியிருக்கும் சிவலோகநாதனை பரந்த நெல்வயல் சூழ்ந்த நீடூரின்கண்ணும் மேவியிருக்கின்றவனை, என்னே யான் நினையாயல் இருந்தவாறு.

7. சொன்மிக்க பொருள் அளவைக்குக் கூறக்கூற அளவுபடாதவனை, ஒழிவின்றி எல்லா வுருவங்களும் தானேயாய் நிற்கின்றவனை (இங்கே விசுவரூபி என்ற குறிப்பு), மிக்க இலேசானவனை, மிக்ககனமுடையானை, மிகத்தாழ்ந்து எல்லாவற்றிற்தும் மேலாயிருப்பவனை, புதிய பொருள்கள் எவற்றினும் புதியவனை, பழயபொருள்கள் எவற்றினும் பழமையானவனை, அலைமோதும் கங்காநதி மோதும் சடாமகுடத்தானை, திருப்புன்கூரின்கண் அமர்ந்திருக்கும் சிவலோகநாதனை, மணி நிறைந்த மாடங்கள்மிக்க நீடூரின் கண்ணும மேவியிருக்கின்றவனை, என்னே யான் நினையாமலிருந்தவாறு.

8. ஆதிசேடச் சயனத்தானுகிய திருமாலும் தாமரைப் பீடத்தானுகிய பிரமதேவனும் அடிமுடிகாண்பே மென்று தேடியுங் காணற்கரிய தலைவன் என்ருல் யாரே அறியவல்லார். இருவரையன்றி காண்பே மென்று முடுகிச்செல்லும் எத்தேவருக்கும் அறியவொண்ணுத பண்பினன் (இங்கே சிற்பரைக்கும் அறியவொண்ணுத தலைவன் என்று குறிப்பிடுகிறது) ஒலிமிக்க வீரக்கழலோடும் சோலை சூழ்ந்ததிருப்புன்கூரின்கண் அமர்ந்து நீர்வயல் சூழ்ந்த நீடூரினும் மேவியிருப்போனுகிய சிவலோகநாதனை, என்னை நான் நினையாமல் இருந்தவாறு.

9. கைகளில் நெய்யொழுகும்படி கழுத்தை வளைத்துக் கைக்கவளம் வாயாற் கவ்வியுண்ணும் வஞ்சகராகிய அமணர்கள் சொன்ன பொய்களையெல்லாம் மெய்யென்று கருதி அவர்களோடு சார்ந்தும் அவர் வயப்படாது திருவருட்டுணையால் சைவசமயஞ் சார்ந்து உய்யவந்த நான், வயல்களெல்லாம்

செங்கமலம் பூத்தலர்ந்த மருதவைப்பாகிய திருப்புன்கூரின்கண் அமர்ந்தருளும் சிவலோகநாதனை, குவளைமலர் பூத்தலர்ந்த திருநீடூரின்கண்ணும் மேவியிருப்பவனை என்னே நினையாமல் யான் இருந்தவாறு.

10. அறிவிலா நெஞ்சமே பொருளீதெனத் துணியமாட்டாது இகழுமாறு என்னே! உவப்பின்றி எங்குமாய்ப் பரந்து ஒன்ருய் நின்றமுதல்வனை, பண்டைநாள் இராவணனை மலைக்கீழ் அஞ்சநெறித்து மீண்டு பாடல் கேட்டு நாளொடுவாள் கொடுத்த தலைவனை, பெரிய மதகரியின் உரியைப் போர்த்தவனை, திருப்புன்கூரின்கண் அமர்ந்திருக்கும் சிவலோக நாதனை, எவற்றையும் எண்ணியாங்கு சங்கற்பத்தால் முடிக்கவல்லானை, நீடூரிலும் மேவியிருப்பானை, என்னே நீதனுகிய யான் நினையாமல் இருந்தவாறு என்பதாம்.

சுந்தரர் திருப்பதிகம்:

1. செழும் பொழில் சூழ்ந்த திருப்புன் கூரின்கண் எழுந்தருளியிருக்கும் இறைவனே! ஆகமநெறி வழுவாது நின்னைப்பூசனை புரியும் மார்க்கண்டேயன் என்னும் அந்தணனுக்கு நாள் அறுதியிட்டவாறு நமன் வந்து பற்றக் கண்ட அவ்வந்தணன் நின திருவடியைப் பற்றி அடைக்கலம்புக உய்யக்கொண்டு, யார்க்கும் மாற்றலாகாப் பெருங்காலனுர் உயிரை மாய்த்த வள்ளற்றன்மை கண்டு, அடியேனையும் அக்கூற்றுவர் கூட்டம் பற்று மாகில் இவன் என்னுடைய அடிமையென்று விலக்கி அருள்புரிவாய் என்னும் கருத்தால் உன்னுடைய திருவடிகளைப் பற்றுக்கோடாக வந்தடைந்தேன் என்பதாம். நாளுலர்ந்தார்க்கு வாழ்நாள் அளவிறந்தன ஈந்தமையால் உயிர்வழங்கும் வள்ளல் என்று கூறுவாரா யினர். செயல் நிகழ்ச்சியில் முன்பின்னுய் இருப்பின் இலக்கணையாய் செவிகளுக்கேற்றி

கேள்வியாற் றெரிந்தும், என இயையக் கொள்க.

2. உலகமுழுவதும் ஒருகால் மேகங்கள் பெய்தலையே மறந்தாலென மாரி பொய்த்து வயலில் நீரின்றி சாலிகள் வாடக்கண்ட அத் தலத்தோர், 'மாநிலம் தருகோம் எங்களை உய்யக்கொள்ள வேண்டும் இவ்விறைவன தருளால்' என்ன, அவர்கட்கிரங்கி ஒளிதழை முகில்களாய் எங்கும்பரந்து பெருவெள்ள மாய்ப் பொழிய, அவ்வெள்ளம் தாங்காது பெயல் நிற்குமாறருளவும் வேண்டிக்கொள்ள அம்மழை தவிர்த்தும், இவ்விரு செயற்கு மாய், இரண்டு பன்னிரண்டு வேலி நிலம் தனக்கெனக் கொண்டருளும் தன்மையைக் கண்டும் உன்னுடைய திருவடிகளையே பற்று யடைந்தேன் செழுமைவாய்ந்த திருப்புன் கூரின்கண் எழுந்தருளியிருக்கும் இறைவனே யென்பதாம்.

3. பழைமுதில் பெய்வான் தந்த பன்னிரு வேலியோடும் தவிர்ப்பான் வேண்டியும் ஈராறு வேலிகள் தந்த ஏயர்கோன் என்னும் வேள்ாளர்க்குச் சூலை நோயால் துயருறும் ஏதத்தை நீக்கியும், பண்டைநாள் வெண்மணலால் இலிங்கந்தாபித்துப் பசுக்களின் பாலைக்கறந்து அபிடேகஞ் செய்யக்கண்டு; அவ்விலிங்கத்தின்மேல் சினந்தெழுந்த தாதையின தாள்களைத் துண்டுபட மழுவாலெறிந்த சண்டீசருக்குப் பரிசாய்ச் சடைமிசை அணிந்த கொன்றைமாலையைச் சூட்டியருளும் தன்மையைக்கண்டு பூதங்களை ஆளுந் தலைவனே உன்னுடைய திருவடிகளை அடைந்தேன் என்பதாம்.

4. நலமிக்க தமிழ்விரகராகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சிலந்தி, முற்றுணர்வுடைய சாக்கியனூர், கண்ணப்பர், கணம்புல்ல நாயனூர் என்னும் இவர்கள் அன்பின்மிகுதியால் ஓரளவு நியதிக்குப்

பிறழச்செயலாற்றினும், குற்றங்களை நீக்கி அன்பின் குணத்தையே பாராட்டிக் கொண்டருள்புரியும் தன்மையைக்கண்டு, ஒலிமிக்க வீரக்கழலணிந்த திருவடிகளை வந்தடைந்தேன்; பொன்னு மணித்திரளும் தாமரைகளும் ஒளிவிடுகின்ற திருப்புன்கூருளானே! என்பதாம். இங்கே அன்பினாலேனும் அறியாமையாலேனும் அடியேன் செய்த துரிசுகளையும் பொறுத்து அருள்புரியவேண்டும் என்பது குறிப்பு.

5. அமுதுண்பாமென நினைந்து மந்தரமலையை மத்தென நாட்டி, வாசுகியை வலி கயிராகக்கொண்டு பாற்கடல் கடைய, அப்பொழுதெழுந்த ஆலங்கண்டஞ்சிச் சரண் புகுந்த, தேவர்கட்கிரங்கி அவ் விடத்தை யுண்டு, கண்டத்தேவைத்த பித்தனே! நீ செய்த சீலமாந்தன்மை கண்டு வளப்பமிக்க பொழில் சூழ்ந்த திருப்புன்கூரின்கண் உள்ளவனே! உன்திருவடியை வந்தடைந்தேன்.

இங்கே சிலமாவது பிறர் துயரங்கண்டு பொறுக்கமாட்டாத தூய உள்ளம். பிறர் வாழ்வையே கருதி தன்வாழ்வு கருதாது விடத்தை யுண்டமையால் பித்தனே என்றார். பித்தர்செயல் உலகியலுக்குஒத்ததும்ஒவ்வாத தும்மாயுள்ளது. கண்டத்தே வைத்தல் மீண்டு தேவர்கள் செருக்குறுமைக்கோர் அறிகுறி.

6. இயக்கர், கின்னரர், இயமன், வருணன், வானத்தியங்குகின்ற ஞாயிறு, திங்கள், தீ, புலி, வானரம், நாகம், வசுக்கள், அசுரர்கள் முதலிய உயிர்த்தொகுதிகளெல்லாம் நின்னை 'உடையான்' என வந்தடைந்து, உனது சீர்பாதங்களைத் தடையின்றி முறைப்படி அருச்சித்தேத்துதல் கண்டு, யானும் யாதொரு அயர்ச்சியுமின்றி உன்னுடைய திருவடிகளை வந்தடைந்தேன்; செழும்பொழில் சூழ்ந்த திருப்புன்கூரின்கண் அமர்ந்தருளும் இறைவனே என்பதாம்.

7. கல்லாலநிழற் கீழிருந்து கற்றலோடன்றிக் கேள்விப்பயனும் வேண்டப்படாத மெய்யுணர்வுமிக்க முனிவர் நால்வர்கட்கும அறநெறி யீதெனக் குறிப்பா லுணர்த்தியும், பூசனை வழிபாடு தப்பாதியற்றிய அருச்சுனனுக்குப் பாசுபதம் தந்தருளியும், தவமிக்க பகீரதன்வேண்ட ஆரவாரித்திறங்கும் கங்காநதியைச் சடையிடை வைத்தும், அருள் புரிந்த மிக்க தூயபரமனே உன திருவடிகளை வந்தடைந்தேன் என்பதாம்.

8. பொன்முதல் மும்மதிலும் தீயெழச் செய்த அன்று, மதில்களழிந்தும் தாமழியாது முதலாய் நின்ற சிறந்த மூவரில் உன் கோயில் காப்பாளராய் இருவரை நிற்கப்பணித்து, தீயெழச்செய்த இடமே அரங்காகக்கொண்டு, அம்மையாரையுங் கடைக்கண்ணால் நோக்கி நீ இயற்றும் ஒப்பற்ற அற்புதத் திருக்கூத்திற்கு மற்றும் ஒருவனை மத்தளமுழக்குமாறு அருள்செய்த தலைவனே! உன்னுடைய திரு

வடிகளை வந்தடைந்தேன்: திருப்புன்கூரின்கண் அமர்ந்தருளும் இறைவனே.

9. பதியுணர்வுடைய அகச்சமயமெனப் பெறும் ஆறு சமயத்தார்கட்கும், அவ்வவர் கூறும் பொருட்கிலக்காய் நின்று அருள்புரிந்தும், வீங்குநீர் இலங்கை மன்னனை உள்ளம் நடுங்க உடல் நடுங்க மலைக்கீழ் அடர்த்திட்டு, அவன் குறித்துப்பாடிய பாடல் கேட்டு வாளொடு நாளும் தந்தருளிய ஒற்றுமை கண்டு, உன்னுடைய திருவடிகளை வந்தடைந்தேன். அகச்சமயம் பாடாணவாத முதல் சிவாத்துவிதம் ஈருகிய ஆறு. இவர்கள் சித்தாந்த சைவரோடும், ஒப்பக்கொள்ள உரிமையுடையவர். சிற்சிலர் பொதுவகையினும் சிறப்புவகையிலும் மாறுகொள்வர் ஆதலால் அவ்வவர்க்கிணங்க, சிவபெருமான்நேர்நின்று அருளுதற்குரியவர். ஏனைய புறச்சமயத்தார்க்கு அவ்வவர் வழிபடும் தெய்வங்களினிடமாய் நின்று அருள்புரிவன்.

10. அசைகின்ற மத்தகக்களிற்றின் உரிபோர்த்தவனை, மன்மதனை எரித்த நெற்றிக் கண்ணுடையவனை, சிவந்த பொன் போன்ற திருமேனியுடையவனை, எல்லாத் தேவர்களையும் ஆளுகின்ற தலைவனை, உமையாட்கு நாயகனை, திருப்புன்கூர் மேவியருளும் சிவலோகநாதனை, ஆரூரனென்னும் வன்றொண்டனாகிய அடியேன் உளங் காதலிக்க நினைந்து விரும்பி அன்பின் பெருக்கால் பாடிய அருந்தமிழ்ப்பாடலாகிய இவ்வீரைந்தையும் பாடுமாறு அருள்கூடவல்லார்க்கு கொடுவினைகள் யாதொன்றுமில்லை; என்றும் இன்பமே.

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் – தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

முந்தி நின்ற வினைக ளவைபோகச் 21
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. க

மூவ ராய முதல்வர் முறையாலே
தேவ ரெல்லாம் வணங்குந் திருப்புன்கூர்
ஆவ ரென்னு மடிக ளவர்போலும்
ஏவி னல்லா ரெயின்மூன் றெரித்தாரே. ௨

பங்க யங்கண் மலரும் பழனத்துச்
செங்க யல்க டிளைக்குந் திருப்புன்கூர்க்
கங்கை தங்கு சடையா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையு மிறையாரே. ௫

கரையு லாவு கதிர்மா மணிமுத்தம்
திரையு லாவு வயல்சூழ் திருப்புன்கூர்
உரையி னல்ல பெருமா னவர்போலும்
விரையி னல்ல மலர்ச்சே வடியாரே. ௬

பவள வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ண முறையுந் திருப்புன்கூர்
அழக ரென்னு மடிக ளவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே. ௭

தெரிந்தி லங்கு கழுநீர் வயற்செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ் திருப்புன்கூர்ப்
பொருந்தி நின்ற வடிக ளவர்போலும்
விரிந்தி லங்கு சடைவெண் பிறையாரே. ௬

பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்
ஆர நின்ற வடிக ளவர்போலும்
கூர நின்ற வெயின்மூன் றெரித்தாரே. ௭

மலைய தனா ருடைய மதின்மூன்றும்
சிலைய தனா லெரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர் வல்ல வரக்கன் றருக்கினை
மலைய தனா லடர்த்து மகிழ்ந்தாரே. ௮

நாட வல்ல மலரான் மாலுமாய்த்
தேட நின்றா ருறையுந் திருப்புன்கூர்
ஆட வல்ல வடிக ளவர்போலும்
பாட லாடல் பயிலும் பரமரே. ௯

குண்டு முற்றிக் கூறை யின்றியே
பிண்ட முண்ணும் பிராந்தர் சொற்கொளேல்
வண்டு பாட மலரார் திருப்புன்கூர்க்
கண்டு தொழுமின் கபாலி வேடமே. ௧0

மாட மல்கு மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பிறவாதே தோன்றிய பெம்மான் றன்னைப்
பேணாதா ரவர்தம்மைப் பேணா தானைத் 25
துறவாதே கட்டறுத்த சோதி யானைத்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான் றன்னைத்
திறமாய வெத்திசையுந் தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நிறமா மொளியானை நீடூரானை
நீதனே னென்னேனா னினையா வாறே. க

பின்றானு மூன்றானு மானான் றன்னைப்
பித்தர்க்குப் பித்தனாய் நின்றான் றன்னை
நன்றாங் கறிந்தவர்க்குந் தானே யாகி
நல்வினையுந் தீவினையு மானான் றன்னைச்
சென்றோங்கி விண்ணளவுந் தீயா னானைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நின்றாய நீடூர் நிலாவி னானை
நீதனே னென்னேநா னினையா வாறே. உ

இல்லானை யெவ்விடத்து முள்ளான் றன்னை
யினிய நினையாதார்க் கின்னா தானை
வல்லானை வல்லடைந்தார்க் கருளும் வண்ண
மாட்டாதார்க் கெத்திறத்து மாட்டா தானைச்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நெல்லால் விளைகழனி நீடூ ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே. ௩

கலைஞானங் கல்லாமே கற்பித் தானைக்
கடுநரகஞ் சாராமே காப்பான் றன்னைப்
பலவாய வேடங்க டானே யாகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானைச்
சிலையாற் புரமெரித்த தீயா டியைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிலையார் மணிமாட நீடூ ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே. ௪

நோக்காதே யெவ்வளவு நோக்கி னானை
நுணுகாதே யாதொன்று நுணுகி னானை
ஆக்காதே யாதொன்று மாக்கி னானை
யணுகாதா ரவர்தம்மை யணுகா தானைத்
தேக்காதே தெண்கடனஞ் சுண்டான் றன்னைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நீக்காத பேரொளிசேர் நீடூ ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே. ௫

பூணலாப் பூணானைப் பூசாச் சாந்த
முடையானை முடைநாறும் புன்கலத்தில்
ஊணலா வூணானை யொருவர் காணா
வுத்தமனை யொளிதிகழு மேனி யானைச்
சேணுலாஞ் செழும்பவளக் குன்றொப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நீணுலா மலர்க்கழனி நீடு ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே. ௬

உரையார் பொருளுக் குலப்பி லானை
யொழியாமே யெவ்வுருவு மானான் றன்னைப்
புரையாக் கனமாயாழ்ந் தாழா தானைப்
புதியனவு மாய்மிகவும் பழையான் றன்னைத்
திரையார் புனல்சேர் மகுடத் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிரையார் மணிமாட நீடு ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே. ௭

கூரரவத் தணையானுங் குளிர்தண் பொய்கை
மலரவனுங் கூடிச்சென் றறிய மாட்டார்
ஆரொருவ ரவர்தம்மை யறிவார் தேவ
ரறிவோமென் பார்க்கெல்லா மறியலாகாச்
சீரரவக் கழலானை நிழலார் சோலைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நீரரவத் தண்கழனி நீடு ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே. ௮

கையெலா நெய்பாயக் கழுத்தே கிட்டக்
கானிமிர்த்து நின்றுண் ணுங் கையர் சொன்ன
பொய்யெலா மெய்யென்று கருதிப் புக்குப்
புள்ளுவரா லகப்படா துய்யப் போந்தேன்
செய்யெலாஞ் செழுங்கமலப் பழன வேலித்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நெய்தல்வாய்ப் புனற்படப்பை நீடு ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே. ௯

இகழுமா றெங்ஙனே யேழை நெஞ்சே
யிகழாது பரந்தோன்றாய் நின்றான் றன்னை
நகழுமால் வரைக்கீழிட் டரக்கர் கோனை
நலனழித்து நன்கருளிச் செய்தான் றன்னைத்
திகழுமா மதகரியி னுரிபோர்த் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நிகழுமா வல்லானை நீடு ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே. ௧0

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பண் – தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அந்த ணாள னுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது கார ண மாக
வந்த காலன் ற னாருயி ரதனை
வவ்வினாய்க் குன் றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன் தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. க

வையக முற்று மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளுஞ்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. ௨

ஏத நன்னில மீரறு வேலி
யேயர்கோ னுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற எறிந்ததண் டிக்குன்
சடைமிசை மல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. ௩

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானுங்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே. ௮

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக் கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. ௯

இயக்கர் கின்னரர் யமனொடு வருண
ரியங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை
யர்ச்சித் தார்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. ௬

போர்த்த நீள்செவி யாளரந் தணர்க்குப்
பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளினாய்ப் பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந் திழியும் புனற்கங்கை நங்கை
யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்தனே நின்றன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. ௭

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரி
லிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
யொருவ நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. ௮

அறிவி னால்மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே யாரருள் புரிந்து
எறியு மாகட லிலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. ௯

கப்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானை
உம்ப ராளியை யுமையவள் கோனை
யூரன் வன்றொண்ட னுள்ளத் தானுகந்
தன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவ ரருவினை யிலரே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவல மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத்தானத்து
நிலவுபெருங்கோயில்பல கண்டாற்றொண்டீர்
கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காணலாமே.

-அப்பர்